சுற்றுச்சூழல் துறை

மற்றும்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

# மக்கள் சாசனம்

2019

# சுற்றுச்சூழல் துறை

## மக்கள் சாசனம்

## 2019

இந்திய அரசியல் சாசனம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான தனிப்பட்ட சட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மாநிலங்களின் நேரடிக் குறிக்கோள் விதி–48–A மற்றும் குடிமக்களின் அடிப்படை கடமைகள் விதி –51–A(g)ல், 'சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும், வனம் மற்றும் வனஉயிரினங்களை பாதுகாக்கவும்' கடமைகள் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத சுற்றுச்சூழல் பணிகளைத் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணிகளை இணைப்புத் துறையான சுற்றுச்சூழல் துறை செயல்படுத்தி வருகிறது.

**துறையின் குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்**

- தேசிய பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலமாக பள்ளி மாணவர்களிடையே பலதரப்பட்ட சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- சூழல் மீட்பு பணிகள்
- பருவநிலை மாற்றம் குறித்த தழுவல்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையினை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்
- கடற்கரை மேலாண்மை
- அனைத்து நகரங்களுக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்கள் தயாரித்தல்
- சுற்றுச்சூழல் சார்ந்த தகவல்களை சுற்றுச்சூழல் தகவல் ENVIS மையம் மூலம் பரப்புதல்
- பல்கலைக்கழகங்கள் / ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மேற்கொள்ளுதல்.

**மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுக்கள்**

1. தேசிய நதிநீர் பாதுகாப்பு மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்பு திட்டங்களின் செயலாக்கக்குழு
2. தேசிய பசுமைப்படை செயலாக்கக் குழு
3. மாநில கடற்கரையோர மேலாண்மைக் குழுமம்
4. மாநில நிபுணர்கள் மதிப்பீட்டுக் குழு
5. மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்

6. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை
7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுபிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதிக்கான அதிகாரம் அளிக்கப்பட்ட குழுமம்
8. தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம்
9. சுரங்கம் மற்றும் கனிமங்கள் தொடர்பான மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் அதிகார குழுமம்.

**துறைத்தலைவர் உறுப்பினராக இருந்து ஆலோசனை வழங்கும் குழுக்கள்**

1. சென்னை ஆறு மீட்பு அறக்கட்டளை
2. சென்னை நீரியல் திட்ட செயலாக்கத்திற்கான மாநில அளவிலான நிலைக் குழு
3. புவிசார் தகவல் பகுதியின்கீழ் நிலபயன்பாட்டு திட்ட செயலாக்கத்திற்கான மாநில அளவிலான நிலைக் குழு
4. தல நிபுணர்கள் மதிப்பீட்டுக் குழு
5. தமிழ்நாடு சாலை பிரிவு திட்டம்
6. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைக் குழு
7. அகஸ்தியர் மலை உயிர்கோள பகுதியின் மாநில அளவிளான நிலைக்குழு

**பொறுப்புகள்**

கீழ்காணும் பொறுப்புகளை நிறைவேற்றப்படுகிறது

- நதிகள் மற்றும் நீர்நிலைகளை பாதுகாக்கும் திட்டங்களின் ஒருங்கிணைப்பு
- தேசிய பசுமைப்படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலம் மாணாக்கர்களிடையே விழிப்புணர்வு உண்டாக்குதல்
- கடற்கரைப்பகுதி ஒழுங்குமுறை அறிவிக்கையை மாநிலத்தில் செயலாக்குதல்
- சுற்றுச்சூழல் துறையின் செயல்பாட்டினையும், சாதனையையும், மக்களுக்கு தெரிவித்தல்
- மாநில சுற்றுச்சூழல் தொடர்பான தகவல்களை இணையதளம் மூலம் வெளியிடுதல்
- மாநில சுற்றுச்சூழல்அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படத்தொகுப்பு தயாரித்தல்
- சுற்றுச்சூழல் மேம்பாடு தொடர்பாக குடிமக்களிடம் இருந்து பெறப்படும் ஆலோசனைகளை கவனமுடன் பரிசீலித்தல்.

**மேற்கொள்ளும் பணிகள்**

**1. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் (இரண்டாம் கட்டம்) .**

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, கடலோர மற்றும் கடல் சார்ந்த வளங்களை நீடித்த அளவில் மேலாண்மை செய்தல் அவசியமானதாகும். இயற்கை வளம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழலை தமிழக கடற்கரையோர மக்களின் முன்னேற்றத்தினை கவனத்தில் கொண்டு ஒருங்கிணைந்த

கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம், செயலாக்க முகமைகளின் சிறந்த ஒருங்கிணைப்புடன் நிறைவேற்றும் வண்ணம், தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழக கடலோர பகுதிகளில் பல்வேறு கடற்கரை மேலாண்மை திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி ரூ 306.20 கோடி மதிப்பீட்டில் பிரேரணைகள் திருத்தப்பட்டு மைய அரசிற்கு ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்டம் நிலை 2ன் கீழ் சமர்பிக்கப்பபட்டுள்ளது. ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படவுள்ள திட்டங்களை செயல்படுத்த ஒரு திட்ட இயக்குநர், ஒரு கூடுதல் திட்ட இயக்குநர் மற்றும் ஒரு திட்ட அலுவலரை கொண்டு மாநில திட்ட மேலாண்மை பிரிவு சுற்றுச்சூழல் துறையில் அமைக்கப்படுள்ளது. இம்மாநில திட்ட மேலாண்மை பிரிவு, திட்ட ஒருங்கிணைப்பு குழுவுடன், அன்றாட நடவடிக்கைகளினை ஒருங்கிணைத்து மற்றும் ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் செயலகமாகச் செயல்படும்.

## 2. கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

தமிழகத்தில் உள்ள கடலோர மாவட்டங்களான கடலோர மண்டல மேலாண்மை திட்டம், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 ன் வழிமுறைகளின் படி தயாரிக்கும் பணியை மைய அரசின் சுற்றுச்சூழல் துறையின் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னையில் உள்ள தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்திற்கு வழங்கப்பட்டது.

தேசிய கடலோர மண்டல மேலாண்மை குழுமத்தின் பரிந்துரைகளின் படி மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை குறித்த அமைச்சகம் தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24/10/2018 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கிகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறை (www.environment) மற்றும் ENVIS(www.envis.nic.in) இணையதளத்தில் 29/11/2018 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கிகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் மென்பொருள் அனைத்து 13 மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை குழுமங்களுக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட துறையினருக்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிக்கை 2019ஐ 18/01/209 அன்று வெளியிட்டது. எனவே, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019ன் வழிமுறைகளின் படி கடலோர மண்டல மேலாண்மை

திட்டம், தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம் மூலம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருத்தப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 ன்படி கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்கள் மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகத்திற்கு தமிழக அரசு மூலம் சமர்ப்பிக்கும் முன்பு இத்திட்டம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டங்கள் மூலம் கருத்துகளை பெறவும் ஆலோசனைகள பெறவும் பொது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,

**3. நீர்நிலைகளை சூழல் மீட்பு செய்தல்**

தூர்வாருதல், கழிவுநீர் ஏரிக்குள் செல்லாமல் திருப்பிவிடுதல், குளத்தை ஆழப்படுத்துதல், தடுப்புச்சுவர் கட்டுதல், மற்றும் மரம் நடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் உயிரினப்பாதுகாப்பு மற்றும் சூழல் அமைப்பினை பாதுகாத்து நீரின் தரத்தை மேம்படுத்துவதே ஏரிகளில் சூழல் மீட்புப்பணிகள் மேற்கொள்ளுதலின்நோக்கமாகும்.

அ) சென்னையில் உள்ள சேத்துப்பட்டு ஏரியில் விளையாட்டு மற்றும் மீன்பிடித்தல் உள்ளிட்ட உயிரியல் பூங்கா ரூபாய் 42.00 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆ) தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை மூலமாக அதன் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் (இரட்டை ஏரி), அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளின் சதுப்புநிலப் பகுதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீளச்செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2018-19 ஆண்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இ) திருவள்ளூர் மாவட்டம் ,திருத்தணி நகராட்சி நல்லதண்ணீர் குளம், நாமக்கல் மாவட்டம் வெண்ணந்துாரில் உள்ள வெண்ணந்துார் ஏரி, ஈரோடு மாவட்டத்தில் ஆண்டிகுளம் ஏரி ,செங்குட்டை ஏரி, மற்றும் கரடிப்பட்டி ஏரி ஆகிய ஐந்து நீர்நிலைகளில் சூழல் மீட்பு பணிகள் ரூ.12.84 கோடியில் செயல்படுத்தப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில உள்ளன.

**4.சுற்றுச்சூழல் விருதுகள்**

சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரது முயற்சி மற்றும் பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் சுற்றுச்சூழல் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் கடந்த 2000 –ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் உலக சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5–ஆம் நாளன்று வழங்கப்படுகின்றன. பல்வேறு

பிரிவுகளில் ஆண்டுதோறும் 10 விருதுகள் ரூ.1.13 இலட்சம் மதிப்பில் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

**5.சூழல் மன்றங்கள்**

சூழல் விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. சுற்றுச்சூழல் மன்றங்கள் 1998–ஆம் ஆண்டிலேயே ஏற்படுத்தப்பட்டன. மாநிலத்தின் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்கள், பேரணிகள், நடைபயணம், மனிதச் சங்கிலி, பயிற்சி, கருத்தரங்குகள், விவாதங்கள், மரம் வளர்த்தல், பள்ளி வளாகத்தினை தூய்மையாக்குதல், மழைநீர் சேகரித்தல், திடக்கழிவு மேலாண்மை, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலமாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2500/– வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது 11469 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் சுமார் 4,50,000 பள்ளிக் குழந்தைகள் சூழல் விழிப்புணர்வு இயக்கத்தில் பங்கு பெற்று வருகிறார்கள்.

**6. பெரிய அளவிலான பிரச்சாரம்**

மாநிலத்தில் உள்ள சூழல் மன்றங்கள் மற்றும் தேசிப்பசுமைப்படை வாயிலாக சுற்றுச்சூழல் துறை மூலமாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.. பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக சுற்றுச்சூழல் தொடர்பான நூல்களைக் கொண்ட நூலகம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த தகவல்கள் அடங்கிய விளம்பர விளக்கப்படம், தகவல் பலகைகள், சுவரொட்டிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மற்றும் கனிணி தொலைக் காட்சிப் பெட்டி ஒலிபரப்பி போன்ற உபகரணங்கள் கொண்ட சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் தமிழ்நாட்டில் 69 கல்வி மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்களுக்கு அடிக்கடிசெல்வதன் மூலம் சுற்றுச்சூழல் குறித்த முதல்தர தகவல்களை இலகுவாகப் பெறுவதோடு மாணவர்களிடையே ஆர்வத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பொது மக்களும் மாணவர்களும் அனைத்து வேலைநாட்களிலும் மையத்தின் ஒருங்கிணைப்பாளரின் அனுமதி பெற்று இம்மையத்திற்கு சென்று பயனடையலாம்.

**7. தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களைக் கொண்டு பள்ளிகளில் மரக்கன்று நடும் திட்டம்**

பள்ளி வளாகங்களினை தூய்மையானதாகவும் பசுமையானதாகவும் பராமரிக்கவும், சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் மாணாக்கர்களை ஈடுபடச்செய்து ஊக்குவிக்கவும்

மாநிலத்தில் சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை செயல்படும் 32 மாவட்டகளிலும் உள்ள 960 பள்ளிகளில் (30 பள்ளிகள்/மாவட்டம்) மரக்கன்றுகள் நட்டு பாரமரிக்க 2017–18 ஆம் ஆண்டில் அரசால் ரூ.144.00 இலட்சம் ஒப்பபளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 2018–19 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மேலும் 960 பள்ளிகளில் செயல்படுத்தும் வண்ணம் விரிவுபடுத்தப்பட்டு விரைவில் நிதி விடுவிக்கப்படவுள்ளது.

**8. சூழல் போட்டிகள் நடத்துதல் மற்றும் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

மாணாக்கர்களுக்கு சூழல் முக்கியத்துவத்தை பரப்புவதற்கென, எட்டாம் வகுப்பிற்குக் கீழ், அதற்கு மேல் என இரண்டு பிரிவாக, (வினாடி–வினா) பேச்சுப்போட்டி, மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில் 2018-19 ஆண்டில், வருவாய் மாவட்ட அளவில் சுற்றுச்சூழல் போட்டிகள் ரூ.64.00 இலட்சம் (2018 -19 ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம்/ மாவட்டம்) செலவில் நடத்தப்பட்டுள்ளன. பரிசுகள் மற்றும் சான்றிதழ்களுடன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் மாணவிகள் தனித்தனியாக சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இத்திட்டம் 2019–20 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

**9.கடற்கரைப் பகுதி சூழல் அமைப்பு தொடர்பாக விளம்பரப் பலகை அமைத்தல்**

13 கடற்கரை மாவட்டங்களில் கடற்கரை சூழல் அமைப்பு முக்கியத்துவம் குறித்தும், கடற்கரைப் பகுதியில் செய்யத்தக்கது செய்யக்கூடாதது குறித்த விவரங்கள் அடங்கிய விளம்பரப்பலகை அமைக்க 2018-19ம் ஆண்டு ரூபாய் 1.00 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

**10 . கடற்கரைப் பகுதி வாழ்விடக் குடியிருப்புகளில் நாடகம், பரப்புரை மற்றும் தெரு நாடகங்கள் நடத்துதல்**

கடற்கரைப் பகுதியில் வசிக்கும் மக்கள் கடற்கரைப் பகுதியில் சூழல் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்த விழிப்புணர்வின்மையால் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திடக்கழிவு, டயர் ஆகியவற்றை எரித்தல், மீன் கழிவுகளை நீர்நிலைகளில் குவித்தல், சிற்றோடைகள் மற்றும் ஆற்றின் முகத்துவாரங்களில் குவித்தல், அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளை வழக்கமாக கொண்டுள்ளனர். எனவே மேற்கண்ட செயல்பாடுகளால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு அரசு சாரா அமைப்புகள் / தேசியப் பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் 13 கடற்கரை மாவட்டங்களில் ரூ.32.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**11. வாகனங்கள்மூலமாக பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமை குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்**

பிளாஸ்டிக்பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு கடும் தீங்கினை விளைவிப்பதால் பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் அடிக்கடி கற்பித்தல் அவசியமாகிறது. எனவே அரசுசாரா அமைப்புகள் /தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் நாட்டுப்புறப்பாடல்கள், நாடகங்கள், தெருநாடகங்கள், வில்லுப்பாட்டு, பாரம்பரியமிக்க நடன நிகழ்ச்சிகள் மூலம் வாகனங்கள் மூலமாக 2013-14 முதல் 2016-17 வரை செயல்படுத்தப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கை பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. ஏனவே, இத்திட்டம் 2018– 2019 ஆம் ஆண்டிலும் ரூ.64.00 இலட்சம் செலவில் மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் மாவட்டத்தில் 20 இடங்களில் மொத்தம் 32 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**12. சிறந்த குறும்படங்களுக்கான சுற்றுச்சூழல் விருதுகள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த மூன்று குறும் படங்களுக்கு பரிசாக முறையே ரூ.7 இலட்சம், 6 இலட்சம் மற்றும் ரூ5 இலட்சம் என விருதுகள் வழங்கப்படும் என அரசு அறிவித்தது.. விருதுக்குரிய சிறந்த படங்களைத் தேர்வு செய்ய அமைத்த தேர்வுக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் விருதுக்குரியவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டு அந்த குறும்படங்கள் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படும்.

**13. இணைய வழிக் கற்றல்.**

பசுமைத் தினங்கள் கொண்டாட்டங்களின் போது சுற்றுச்சூழல் துறையிலுள்ள வல்லுநர்களோடு மாணாக்கர்கள் இணையதள வழியாக நேரடியாக தொடர்பு கொள்ள ஏதுவாக இணையவழி கற்றல் என்ற இத்திட்டத்தின்படி ஏற்கனவே பள்ளிகளில் செயல்பட்டு வரும் 57 சுற்றுச்சூழல் தகவல் மையங்கள் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.14.44 இலட்சங்கள் செலவில், இத்துறையின் வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் மேலும் 12 சுற்றுச்சூழல் தகவல் மையங்கள் துறையின் வலைதளத்துடன் இணைக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்த மாணவர்களும் பசுமை தினங்களில் வல்லுனர்களோடு தொடர்பு கொண்டு சுற்றுச்சூழல் குறித்த தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

**14. தமிழகத்திற்கான நீலக்கொடி கடற்கரை திட்டம்**

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பது மற்றும் கடற்கரையில் உள்ள இயற்கை வளங்கள் மற்றும் கடற்கரை இடங்களின் நிரந்தர தன்மையை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நீலக்கொடி கடற்கரை திட்டம் வழிமுறைகளின்படி கடற்கரையை மேம்படுத்த, தமிழகத்தில் மகாபலிபுரம் கடற்கரையை முன்மாதிரி

திட்டமாக செயல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நீலக்கொடி கடற்கரை திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு, கண்காணித்து, செயல்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கடற்கரை மேலாண்மை குழு அமைக்கப்பட்டு மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்தின் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**15. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்துவதற்கென, தமிழக அரசால் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பருவநிலை மாற்றத்தின் விளைவுகளை கட்டுப்படுத்துவதற்கான செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு, பாதிப்புகளை தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகளும் இத்திட்டத்தின் மூலம் இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊக்குவித்தல் மற்றும் திட்டம் சார்ந்த செயல்பாடுகளான வனப்பகுதிகளுக்கு வெளியே மரங்கள் நட்டு தமிழ்நாட்டினைப் பசுமைப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த உற்பத்தி மற்றும் முயற்சிகள், சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுத்திடுதல் போன்ற பணிகளும் இத்திட்டத்தின் முக்கியமான நோக்கமானதாகும்.

**16. தேசிய பருவநிலை மாற்றம் தழுவல் நிதி**

தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, தொடர்பு துறையாக உள்ள சுற்றுச்சூழல்துறை, சமர்ப்பித்த ''தமிழ்நாடு மன்னார் வளைகுடாவின் நீடித்த மற்றும் பருவநிலை மாற்றத்திற்கேற்புடையதான கடலோர வாழ்விடங்கள் மற்றும் பல்லுயிரினங்கள் மேலாண்மை மற்றும் மறுவாழ்வு'' என்ற திட்டப் பிரேரணைக்கு அனுமதி வழங்கிய மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம், தேசிய பருவநிலை மாற்றம் தழுவல் நிதியின் கீழ் ரூ.24.74 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சமர்ப்பித்த, தமிழகத்தில் உள்ள சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நீர்நிலைகளை தயார்படுத்துதல் என்ற திட்டத்திற்கு, மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை குறித்த அமைச்சகம் அனுமதி வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ 23.80 கோடியினை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## 17. பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம்

மார்ச் 31, 2015 அன்று மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தால் இசைவளிக்கப்பட்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல்திட்டம் கீழ்க்கண்ட ஏழு பிரிவுகளின் கீழ் பாதிப்பிற்குள்ளாகும் பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.

1. நீடித்த வேளாண்மை
2. நீர் ஆதாரம்
3. கடற்கரைப் பகுதி மேலாண்மை
4. வனம் மற்றும் உயிர்ப்பன்மயம்
5. நீடித்த உறைவிடம்
6. எரிசக்திதிறன், புதுபிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சூரிய சக்தி,
7. அறிவாற்றல் மேலாண்மை

முதல் முன் மாதிரி ஆலோசனை கூட்டம் துறை மற்றும் பிரிவு வாரியான துறைகள் மற்றும் முகமைகளின் பங்கேற்புடன் 20.09.2018 அன்று சுற்றுச்சூழல் துறையினால் நடத்தப்பட்டது. CITRAN மற்றும் GIZ அலுவலர்களுடன் 12.2.2019 அன்று பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

ஏறத்தாழ அனைத்து துறைகளிடமிருந்தும் பரிந்துறைகள் ஆலோசனைகள்/ நோக்கம் மற்றும் விவரங்கள் பெறப்பட்டு, ஒரு வரைவு அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சம்மந்தப்பட்ட துறைகளிலிருந்தும் வரைவு அறிக்கைகளின் உள்ளீடுகளை பெற்ற பின்பு இறுதி வரைவு அறிக்கை வடிவமைக்கப்பட்டு முடிவு மேற்கொள்வோர் மற்றும் திட்ட வடிவமைப்பாளர்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

## 18. கடற்கரைப் பகுதி மேலாண்மை

கடலோர சூழலினைப் பாதுகாப்பதற்கும், கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி அதன் மூலம் கடற்கரையோரங்களில் வசிக்கும் மீனவ சமுதாயம் மற்றும் இதர உள்ளூர் மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலை அதன் தன்மை மாறாது பாதுகாத்திடவும், கடலோரப் பகுதியில் நீடித்து நிலைத்து நிற்கும் வளர்ச்சியினை மேம்படுத்தவும், மைய அரசு, கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 1991–க்கு மாற்றாக, சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் கீழ் கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 2011–ஐ கீழ்க்கண்டவாறு வெளியிட்டுள்ளது.

கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 2011-ன்படி கடற்கரைப் பகுதி நான்கு மண்டலங்களாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்– II (வளர்ச்சியடைந்த பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–III (கிராமப் பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–IV (கடல்நீர் பகுதியில் உயர் பேரலை வரிசைக்கும் நாட்டின் கடல் எல்லை பகுதிக்கும் (12 நாட்டிகல் மைல்ஸ்) இடைப்பட்ட கடல் பகுதியும், பேரலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதியாகும்)

தற்போது, மைய அரசின் சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவகால மாற்ற அமைச்சகத்தினால் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை அறிவிக்கை 2019 பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிக்கையின் விதிகளின்படி, தமிழ்நாட்டிற்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை அறிவிக்கை 2019 நடைமுறைப்படுத்தப்படும்.

**19. கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமங்கள்**

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தமிழக அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் முதன்மை செயலரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் மற்றும் பல்வேறு துறைகள், நிறுவனங்கள், முகமைகளிலிருந்து தேர்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் கொண்ட மாநில அளவிலான கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமத்தை நிறுவியுள்ளது. மாநில கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமம் இதுவரையில் 103 கூட்டங்கள் நடத்தி, பல கடற்கரை சம்மந்தப்பட்ட திட்டங்கள் மற்றும் நிலுவைகள் மீது முடிவுகள் எடுத்துள்ளது.

மாநில அரசு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமங்களை 1998–ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இக்குழுமங்கள் கடற்கரை மண்டலங்களில் எழும் பிரச்சனைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூட்டங்களை கூட்டி, கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கைகள் குறித்த பொருள்கள் மீது முடிவுகள் மேற்கொண்டு வருகிறது.

**20. சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS):-**

சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS) மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை அமைச்சகத்தின் நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இம்மையம் வழங்கி வருகிறது. தகவல்கள் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் *www.tnenvis.nic.in* என்ற வலைதளத்தின் மூலம் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. செய்திமடல்

வெளியிடுதல், வலைதளம் சார்ந்த தகவல் தொகுப்புகளை உருவாக்குதல், சுற்றுச்சூழல் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல் போன்றவை இம்மையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பசுமைத்திறன் அபிவிருத்தி திட்டம், (GSDP) மற்றும் வலைபின்னல் வடிவிலான வரைபடம் தயாரிக்கும் அமைப்பு (GRIDSS) மற்றும் சமுதாய சிறப்புக்கு நீடித்த சுற்றுசூழல் வெளிப்பாடு கொண்ட கிராமப் புறத்திட்டம் (CESVP) ஆகியவை சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் கூடுதலான திட்ட செயல்பாடுகளாகும்.

**21. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை**

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களைக் கண்காணிக்க தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை தமிழ்நாடு அரசால் 22.01.2003ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமைக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர்–செயலராகவும், உள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையானது தேசிய பசுமைப்படை செயல்பாடுகள் மற்றும் மாநிலத்தில் சுற்றுச்சூழல் மேலாண்மை செயல்பாடுகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் திட்ட துறை, பொதுப்பணித்துறை, மீன்வளத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக திட்டங்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**22.தேசிய பசுமைப்படை**

2002–2003ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தேசிய பசுமைப்படைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை ஒரு தொடர்புத்துறையாக செயல்பட்டு வருகிறது. மாவட்டத்திற்கு 250 சூழல் மன்றங்கள் வீதம் மொத்தமுள்ள 32 மாவட்டங்களில் தமிழகம் முழுவதும் மொத்தம் 8000 சூழல் மன்றங்கள் 8000 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை செயல்படுகிறது. தேசிய பசுமைப்படை சூழல் மன்றத்தின் செயல்பாடுகளுக்கு 2018-19 ஆம் ஆண்டில் பள்ளி ஒன்றிற்கு ரூ.5000/– வீதம் மத்திய அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தின் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு தேசிய பசுமைப்படை செயல்பாடுகள் குறித்த பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சூழல் விழிப்புணர்வு இயக்கத்தில் 3,20,000 மாணவ, மாணவியர்கள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

பள்ளி வளாகத் தூய்மை, மரம் நடுதல், விழிப்புணர்வுப் பேரணிகள், ஆண்டுதோறும் குறைந்த பட்சம் ஆறு பசுமை தினங்களை கொண்டாடுதல், மண்புழு உரம் தயாரித்தல், சுற்றுச்சூழல் கண்காட்சி, சுற்றுச்சூழல் போட்டிகள், பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரம், சூழல் விழிப்புணர்வு குறித்த கலை நிகழ்ச்சிகள், இயற்கை முகாம்கள், தூய்மை இந்தியா போன்ற சூழல் விழிப்புணர்வு, பணிகளில் தேசிய பசுமைப்படை மாணவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

**23. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி**

நுண்ணுயிர் மூலமாக ஏரி நீரினை தூய்மைப்படுத்தவும், கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களை மறுசீரமைக்கவும் புதுமையான சூழல் ஆராய்ச்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**24.மாநில சுற்றுச்சூழல் அறிக்கை**

மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேம்படுத்தப்படும்.

**25. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்**

அ. தமிழக கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உயர் அலைமட்டம் குறியீடு வரைபடம் தயாரித்தல்.

ஆ. உயர் அலைமட்ட குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல்தூண் நடுதல்.

இ. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்.

ஈ. அதிக அளவில் பாதிப்பிற்கு உள்ளாகும் கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரித்தல்.

உ. நுண்ணுயிர் மாற்று முறையில், சென்னை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகளை, மேம்படுத்துதல்.

ஊ. திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு கொணர்தல்.

சூழலுக்கு தகுந்த நிலப்பயன்பாட்டிற்கான திட்டத்தை வடிவமைத்தல், நிலச் சீர்கேட்டினைக் குறைத்தல், நில மறுசீரமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதும் நீடித்து நிற்கும் வளர்ச்சிக்கான சூழல் மேலாண்மை திட்டம், சுற்றுலா நகரமான குற்றாலத்திற்கு தயாரிக்கப்பட உள்ளது. தயாரிக்கப்படும் இத்திட்டம் செயல்பாட்டிற்காக நிதி உதவிபெற அனுப்பி வைக்கப்படும்.

**26. தகவல் உரிமை சட்டம், 2005**

தகவல் உரிமை சட்டம், 2005ன்கீழ் இத்துறையின் கணக்கு அலுவலர் – பொதுத் தகவல் அலுவலராகவும், கூடுதல் இயக்குநர்–மேல்முறையீட்டு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| **பொது தகவல் அலுவலர்** | **தொலைபேசி எண்.044–2433 6421/24336928** |
| **சுற்றுச்சூழல் துறை அலுவலகம்,** | **நிகரி 044–2433 6594** |
| **சென்னை 600 015.** | **மின் அஞ்சல்: tndoe@tn.nic.in** |
| | **இணைய தளம்: www.environment.tn.gov.in** |

**27. மக்கள் குறை தீர்க்கும் அமைப்பு**

கடற்கரைப் பகுதி ஒழுங்குமுறை குறித்து பெறப்படும் பிரச்சனை குறித்த பொதுமக்கள் குறைகேட்பு விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த மாவட்ட கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர்/ தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளருக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும். காற்று மற்றும் நீர் குறித்த குறைகேட்பு விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உரிய நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்படும். இத்துறையின் துணை இயக்குநருக்கு எழுத்து மூலமாகவோ/தொலைபேசி மூலமாகவோ / மின்அஞ்சல் (email:-tndoe@tn.nic.in) மூலமாகவோ குறைகள் தெரிவிக்கப்பட்டால் அவற்றை தீர்த்து வைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**28. இணைய தளம்**

இத்துறை சம்மந்தப்பட்ட அரசாணைகள், மாவட்ட சுற்றுச்சூழல் நிலை குறித்த விவரங்கள், கடற்கரையோர கட்டுப்பாட்டு பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகள், தடை செய்யப்பட்ட பணிகள், கடற்கரை மேலாண்மைக் குழுமத்திடம் உரிமம் பெற கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள் குறித்த விவரங்கள், சுற்றுச்சூழலில் ஈடுபட்டுள்ள தன்னார்வ நிறுவனங்கள் குறித்த விவரங்கள், சுற்றுச்சூழல் விருதுகள், விருதுகள் பெற விண்ணப்பிக்கும் முறை, தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஆற்று நீர் மாசுத் தடுப்புப் பணிகள் குறித்த விவரங்களை இத்துறையின் இணைய தளத்தின் மூலம் பெறலாம்.

(www.environment.tn.gov.in / www.envis.nic.in / www.greencorpstn.net)

**29. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்**

1. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்,
   தலைமைச் செயலகம், சென்னை–9.
   தொலைபேசி : 2567 2265 (0)
   (Email:- forsec@tn.gov.in)

2. முதன்மைச் செயலர்,
   சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை–9.
   தொலைபேசி : 2567 1511 நிகரி: 2567 0560

3. இயக்குநர்,
சுற்றுச்சூழல் துறை,
பனகல் மாளிகை தரைதளம்,
எண்.1, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை 600 015
தொலைபேசி: 2433 6421 / 2433 6928 நிகரி: 2433 6594
(Email:- tndoe@tn.nic.in)

4. உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மைமுகமை
பனகல் மாளிகை தரைதளம்,
எண்.1, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை 600 015
தொலைபேசி: 2433 9061 நிகரி: 2433 6594

5. உதவி வனப்பாதுகாவலர்,
கடற்கரைப் பகுதி பசுமைப்படை,
பனகல் மாளிகை தரைதளம்,
எண்.1, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை 600 015

*********

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## பார்வை

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது சீரிய கண்காணிப்பு மற்றும் சிறந்த முறையில் மாசு கட்டுப்பாடு சட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மாநிலத்தின் நீர் நிலைகள், நிலம் மற்றும் சுற்றுப்புறம் மாசடைவதனைக் கட்டுப்படுத்தி சுற்றுச் சூழல் எவ்வித சீர்கேடும் அடையா வண்ணம் பாதுகாக்கும்.

## குறிக்கோள்

- வாரியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு வெளிப்படையான மற்றும் திறமையான நிர்வாகத்தினை செயல்படுத்துதல்.
- முக்கிய நோக்கங்களுக்கான விமரிசனங்களை நேர் மனப்பான்மையுடன் கருத்தில் கொண்டு உரிய சீரமைப்பு முறைகளை மேற்கொள்ளுதல்.
- கணிப்பொறி உள்ளடக்கிய நவீன தொழில் நுட்பங்களை மேற்கொண்டு சேவையினை தொடர்ந்து மேம்படுத்துதல்.
- பொது மக்கள், தொழில் முனைவோர் ஆகியோரால், சுற்றுச்சூழல் சம்பந்தமாக எழுப்பப்படும் குறைகளை நிவர்த்தி செய்து மாவட்ட அலுவலகங்கள் மூலம் விரைவான செயல்பாட்டினை மேற்கொள்ளுதல்.
- மாநிலத்தில் முக்கியமான ஆறுகள், ஏரிகள், கடலோரப் பகுதிகள் மற்றும் நீர் ஆதாரங்களில் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொண்டு நீர் மாதிரிகளை சோதனை செய்து நீரின் தரத்தினை கண்காணித்தல்.
- காற்றின் தரம், நிர்ணயித்த அளவிற்கு உட்படுவதனை கண்காணிக்க முக்கியமான நகரங்கள், தொழில் வளாகங்கள் மற்றும் பெரிய குடியிருப்பு பகுதிகளில் மாசினை கட்டுப்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளுதல்.
- நீர், நிலம் மற்றும் காற்று ஆகியவற்றின் மாசினைக் கட்டுப்படுத்தி மேற்கொண்டு சீர்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மாசு தடுப்பு தொழில் நுட்பங்களை அறிய செய்து அவர்களின் திறனை வளர்த்தல்.

- பொது மக்கள் மத்தியிலும் / தொழிற்சாலைகளிலும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

இந்திய அரசியலமைப்பு சட்டமானது குடிமக்களுக்கும், அரசுக்கும் சுற்றுச்சூழல் குறித்த கடமைப் பொறுப்பை மாநில கொள்கை கோட்பாட்டில் கீழ்க்கண்டவாறு வகுத்துள்ளது.

**சரத்து 48–அ**

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் நாட்டின் காடுகளையும் வன வாழ்க்கையையும் பாதுகாக்க அரசு முனைதல்வேண்டும்.

**சரத்து 51–அ**

காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வன வாழ்க்கையை உள்ளடக்கிய இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாத்து, மேம்படுத்தி மற்றும் வாழும் உயிரினங்கள் மீது இரக்கம் காட்டுதலும் ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமையாகும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் சம்பந்தமான 1974ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் , 1981ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1986ம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அறிவிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. மேலும் வாரியமானது தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் காற்றினை ஆய்வு செய்து அவற்றின் சுத்திகரிப்பு வசதிகளையும், நீர் நிலைகளில் நீரின் தரத்தையும் ஆய்வு செய்து வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஆய்வுகளை மேற்கொண்டு நீர், காற்று மற்றும் நில மாசு குறித்த விவரங்களை சேகரித்து கழிவுநீர் / தொழிற்கழிவுநீர் மற்றும் வெளியேற்றும் காற்றின் தரத்திற்கான அளவீடுகளை நிர்ணயித்து கடமையாற்றி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், முறையான சுத்திகரிப்பு மற்றும் துாய்மைப்படுத்தும் முறைகளை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1982 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, சென்னையில் தலைமை அலுவலகத்தினையும், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையிலான 7 மண்டல அலுவலகங்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையிலான 38 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதிகளில் 2 பறக்கும் படைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கும் காற்றின் தரத்தை கண்காணிக்கவும் 8 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் 8 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை சிவப்பு, ஆரஞ்சு, பச்சை என்று வகைப்படுத்தி அவற்றின் செயல்பாடுகளை கண்காணித்து இணையதள வாயிலாக உரிய கால அளவிற்கு இசைவாணை வழங்கி வருகிறது. மாவட்ட அலுவலர்கள் அவர்களது எல்லைக்குட்பட்ட

